**MCOP NO: 4756/2024** **DATE: 18.08.2026**

ம.சா : 2

பெயர் : திரு.மணிவண்ணன்

த/பெ : திரு. கலியமூர்த்தி

வயது : 36

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6 ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 18.08.2026 ல் பதிவு செய்யப்பட்டது.

<u>**முதல் விசாரணை**</u>

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பு கண்ணுற்ற சாட்சி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணம் மசாஆ 13 ஐ தாக்கல் செய்கிறேன்.

<u>**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

நீதிமன்ற அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்க வரவில்லை. மனுதாரர் தரப்பில் கேட்டுகொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். விபத்து குறித்த குற்றவியல் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் ஏதும் அளிக்கவில்லை. விபத்து குறித்து காவல் நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை. யார் புகார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. முதல் தகவல் அறிக்கையில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதாக குறிப்பு இல்லை என்றும், எனது பிரமாண பத்திரிக்கையில் மேற்படி குறிப்பை சொல்லியுள்ளேன் என்றால் மின்சாரம் துண்டிக்கப்பட்டு தான் இருந்தது. ஆட்டோ நிறுத்தப்பட்ட பின்னிட்டு எவ்வளவு நேரம் கழித்து விபத்து நடந்தது என்றால் சுமார் 10 நிமிடங்கள் இருக்கும். எனது பிரமாண பத்திரிக்கயில் ஆட்டோவானது பின்னோக்கி வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் விபத்து சமயத்தில் ஆட்டோ மேடான பகுதியில் நிறுத்தியிருந்தது, மழை பெய்ததால் ஆட்டோவானது பின்னோக்கி வர ஆரம்பித்ததாக சொல்லியுள்ளேன். இந்த விவரத்தை முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். விபத்தில் இறந்து போன நபர் தலையில் காயம் பட்டு தான் இறந்தார் என்றால் சரிதான். அவர் முறையான தலைகவசம் அணிந்திருந்தால் விபத்தினால் தலையில் காயம் ஏற்பட்டு அதனால் அவருக்கு இறப்பு ஏற்பட வாய்ப்பு இல்லை என்றும் சொன்னால் சரியல்ல, தலைகவசம் அணிந்திருந்தார். 1 ம் எதிர்மனுதாரர் வாகனமான ஆட்டோவானது விபத்து சமயத்தில் முறையாக தான் நிறுத்தப்பட்டிருந்தது என்றால் சரியல்ல.

விபத்தில் அடிபட்ட இறந்த நபர் தான் அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும் தனது வாகனத்தை ஓட்டி நின்று கொண்டிருந்த ஆட்டோ மீது மோதியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. சத்திய பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளபடியும் விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இறந்தவரின் சகோதரர் விபத்து தேதியில் சம்பவ இடத்தில் இருந்ததால் தான் நான் புகார் கொடுக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சம்பவ தேதியில் சம்பவ இடத்தில் இருந்தேன் என்றும், நான் சம்பவத்தை பார்த்தேன் என்பதை காட்டுவதற்கும் நான் விபத்தை பார்க்கவில்லை என்றும், மனுதாரர்கள் கேட்டுக்கொண்டதற்காக பார்க்காத விபத்தை பார்த்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.